**ஏப்ரல் – 04**

# TNPSC துளிகள்

- துறைமுகங்கள், கப்பல்கள் மற்றும் நீர்வழிப் போக்குவரத்திற்கான இணை அமைச்சர் மான்சுக் மான்டவியா அவர்கள் சூரத்தின் ஹசிரா துறைமுகத்திலிருந்து டையூ வரையிலான பயணியர் கப்பல் சேவையினைத் தொடங்கி வைத்தார்.
  - இத்தகைய சேவை நாட்டிலேயே இது போன்ற வகையில் முதன்முறையானதாகும்.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டைச் சேர்ந்த வெளிநாட்டுத் தொழிலாளர்கள்

- கடந்த ஐந்தாண்டுகளில் இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குப் பணிக்குச் செல்லும் 10 நபர்களுள் ஒருவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவராக உள்ளார்.
- இக்காலகட்டத்தில் அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிய இரண்டாவது மாநிலம் தமிழ்நாடாகும்.
- தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதில் முதலிடத்தில் கேரள மாநிலம் உள்ளது.
- 2016 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2021 ஆம் ஆண்டு மார்ச் 18 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாட்டிலிருந்து 13.1 லட்சம் மக்கள் வேலைக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.
- அதே காலகட்டத்தில் கேரள மாநிலத்திலிருந்து 1.9 மில்லியன் மக்கள் வேலைக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.
- கடந்த ஐந்தாண்டுகளில் நாடு முழுவதும் வேலை தேடும் 1.3 கோடி மக்களின் மொத்த எண்ணிக்கையில் கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களின் பங்கு மட்டும் ஏறத்தாழ 24% ஆகும்.
- சுமார் 12.6 லட்சம் மக்கள் உத்தரப் பிரதேசத்திலிருந்து வெளிநாடுகளுக்கு வேலைக்காக சென்றுள்ளனர்.
- இந்தத் தரவுகள் மாநிலங்களவையில் மத்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் V. முரளிதரன் அவர்களால் சமர்ப்பிக்கப் பட்டது.

*குறிப்பு*

- 4.7 லட்சம் மக்கள் வந்தே பாரத் என்ற திட்டத்தின் கீழ் தமிழ்நாடு திரும்பியுள்ளனர்.
- பெருந்தொற்றின் போது உலகம் முழுவதும் சிக்கிக் கொண்டு துன்பத்தில் தவித்த இந்தியர்களை நாடு திரும்பச் செய்வதினை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## AIM – PRIME

- நிதி ஆயோக்கின் அடல் புத்தாக்கத் திட்டமானது (AIM – Atal Innovation Mission) AIM – PRIME (Program for Researchers on Innovations, Market - Readiness & Intrepreneurship) திட்டத்தை தொடங்கியுள்ளது.
- இத்திட்டம் இந்தியா முழுவதுமுள்ள அறிவியல் சார்ந்த உள்ளார்ந்த தொழில்நுட்பத்

தொடக்க மற்றும் துணிகர நிறுவனங்களை மேம்படுத்தி அவற்றுக்கு ஆதரவு அளித்தலை நோக்கமாகக் கொண்டதாகும்.

- இந்த வகையில், இத்திட்டத்தை நாடு முழுவதும் தொடங்குவதற்காக Bill & Melinda Gates அறக்கட்டளையுடன் அடல் புத்தாக்கத் திட்டம் கை கோர்த்துள்ளது.
- அது Venture – Centre எனும் இலாப நோக்கமில்லாத தொழில்நுட்ப வர்த்தகத் தொடக்க நிறுவனங்களைப் பாதுகாக்கும் அமைப்பினால் அமல்படுத்தப்படும்.
- இத்திட்டத்தின் முதல் தொகுதியில் வலுவான அறிவியல் சார்ந்த உள்ளார்ந்த தொழில்நுட்ப வர்த்தகச் சிந்தனைகளை கொண்டுள்ள தொழில்நுட்ப மேம்பாட்டாளர்களுக்கு (ஆரம்பக் கட்டத்திலுள்ள உள்ளார்ந்த தொழில்நுட்ப தொடக்க நிறுவனங்கள் மற்றும் அறிவியலாளர்கள் / பொறியாளர்கள் / மருத்துவர்கள்) வாய்ப்பு வழங்கப் படும்.
- 12 மாதங்களுக்குப் பயிற்சி மற்றும் உதவி வழங்குதல் ஆகியவற்றின் மூலம் குறிப்பிட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதையே இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## முதல் இந்திய – கொரியப் பூங்கா

- டெல்லி இராணுவக் குடியிருப்புப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் இந்திய கொரிய நட்புறவுப் பூங்காவினை மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் கொரியக் குடியரசின் தேசியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. சூ வூக் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.
- இந்தியப் பாதுகாப்பு அமைச்சகம், இந்திய இராணுவம், டெல்லி இராணுவக் குடியிருப்பு வாரியம், கொரியத் தூதரகம் மற்றும் இந்திய கொரியப் போர் மூத்தப் படை வீரர்கள் சங்கம் ஆகியவற்றைக் கலந்தாலோசித்து இப்பூங்கா உருவாக்கப் பட்டு உள்ளது.
- 1950 – 53 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற கொரியப் போர்களில் பங்கேற்ற 21 நாடுகளில் இந்தியாவும் ஓர் அங்கமாகப் பணியாற்றியதை நினைவு கூறும் ஒரு நினைவுச் சின்னமாகவும் இப்பூங்கா திகழும்.

## Carnival – COV

- கொரோனா வைரசுக்கு எதிரான முதல் விலங்குத் தடுப்பூசி ரஷ்யாவில் உருவாக்கப் பட்டுப் பதிவு செய்யப் பட்டுள்ளது.
- இது அந்த நாட்டின் வேளாண் பாதுகாப்பிற்கான ஒரு கண்காணிப்பு நிறுவனமான Rosselkhoznadzor என்ற அமைப்பால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்தத் தடுப்பூசி Carnivac – Cov எனப் பெயரிடப்பட்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## 4 பொதுத்துறை வங்கிகளில் மூலதன முதலீடு

- வட்டியில்லாப் பத்திரங்களை வங்கிகளுக்கு வழங்குவதன் மூலம் 2020-21 ஆம் ஆண்டில் அரசுக்குச் சொந்தமான நான்கு வங்கிகளில் ரூ.14,500 கோடியை மூலதன முதலீடு செய்ய உள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

- அரசுக்குச் சொந்தமான அந்த நான்கு வங்கிகள்
    - சென்ட்ரல் இந்தியா வங்கி
    - இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
    - பாங்க் ஆஃப் இந்தியா மற்றும்
    - UCO வங்கி
- இது நடப்பு நிதியாண்டான 2020 – 21 ஆம் ஆண்டில் பொதுத்துறை வங்கிகளுக்கு அரசு செலுத்த வேண்டிய மொத்த மூலதன முதலீட்டுத் தொகையான ரூ.20,000 கோடியை நிறைவு பெறச் செய்கிறது.
- முன்னதாக 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பஞ்சாப் மற்றும் சிந்து வங்கியில் ரூ.5,500 கோடி முதலீடு செய்யப்பட்டது.

(Ref. F. No.4(17)-B(W&M)/2020 dated March 30, 2021)

**Name of the Public Sector Banks and Allocation of Securities (i) Non-interest bearing (Non-transferable) Special GoI Security, 2031; (ii) Non-interest bearing (Non-transferable) Special GoI Security 2032; (iii) Non-interest bearing (Non-transferable) Special GoI Security 2033; (iv) Non-interest bearing (Non-transferable) Special GoI Security 2034; (v) Non-interest bearing (Non-transferable) Special GoI Security 2035; and (vi) Non-interest bearing (Non- transferable) Special GoI Security 2036,** is as under:

| Sl. No. | Name of Eligible Bank | Maturing in Year (₹ crore) | | | | | | (₹ crore) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2031 | 2032 | 2033 | 2034 | 2035 | 2036 | Amount Allocated |
| 1 | Central Bank of India | 800 | 800 | 800 | 800 | 800 | 800 | 4800 |
| 2 | Indian Overseas Bank | 685 | 683 | 683 | 683 | 683 | 683 | 4100 |
| 3 | Bank of India | 500 | 500 | 500 | 500 | 500 | 500 | 3000 |
| 4 | UCO Bank | 435 | 433 | 433 | 433 | 433 | 433 | 2600 |
| | **Total** | **2420** | **2416** | **2416** | **2416** | **2416** | **2416** | **14,500** |

By Order of the President of India,
RAJAT KUMAR MISHRA, Addl. Secy.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## மேற்குத் தொடர்ச்சி மலையில் ஒரு புதிய வண்ணத்துப் பூச்சி இனம்



- அனைத்து இந்திய ஆராய்ச்சிக் குழு ஒன்றால் மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து ஒரு பட்டாம்பூச்சி இனம் கண்டுபிடிக்கப்பட்டது இதுவே முதல்முறையாகும்.
- மேற்குத் தொடர்ச்சி மலையில் லைகேனிட் பட்டாம்பூச்சி (Lycaenid butterfly) இனத்தின் ஒரு புதியக் குழுமத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

- இக்குழுமமானது நாக்காடுபா பேரினத்தினைச் (Nacaduba genus) சேர்ந்ததாகும்.
- இந்த வண்ணத்துப் பூச்சிகளுக்கு ராமசாமியின் ஆறுவரி நீல வண்ணத்துப் பூச்சி மற்றும் ‘சிலோன் வரயன்நீலி’ (Ramaswami’s Six Line blue and Ceylon Varayanneeli) என்று பெயரிடப் பட்டுள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## தாதாசாகிப் பால்கே விருது

- திரு. ரஜினிகாந்த் இந்த ஆண்டிற்கான மதிப்பு மிக்க தாதாசாகிப் பால்கே விருது வழங்கி கவுரவிக்கப் பட்டுள்ளார்.
- ரஜினிகாந்த் 1975 ஆம் ஆண்டில் வெளியான K. பாலச்சந்தரின் அபூர்வ ராகங்கள் என்ற திரைப்படத்தின் மூலம் சினிமாவிற்குள் அறிமுகமானார்.
- அவர் தமிழ் சினிமாவில் 45 வருடத்திற்கும் மேலாக திரைப்பயணத்தை மேற்கொண்டு உள்ளார்.

### *விருது பற்றிய தகவல்கள்*

- இந்தியத் திரைப்படத் துறையில் வழங்கப்படும் உயரிய விருது தாதாசாகிப் பால்கே விருதாகும்.
- இவ்விருது திரைப்பட விழா இயக்குநரகத்தால் வழங்கப் படுகிறது.
- இந்திய திரைப்படத் துறையின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் பணியாற்றிய நபர்களுக்காக இவ்விருது வழங்கப்படுகிறது.
- துண்டிராஜ் கோவிந்த் பால்கே அவர்களின் நினைவாக இவ்விருதிற்கு இப்பெயர் சூட்டப் பட்டது.
- பால்கே இந்திய திரைப்படத் துறையின் தந்தையாகப் போற்றப்படுகிறார்.
- இவ்விருது 1969 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- இவ்விருதைப் பெறுபவர் ஒரு சுவர்ண கமலப் பதக்கம், ஒரு சால்வை மற்றும் ரூ.10 லட்சம் பரிசுத்தொகை ஆகியவற்றைப் பெறுவார்.



# இதரச் செய்திகள்

## உலகளாவியப் பாலின இடைவெளி அறிக்கை

- உலகப் பொருளாதார மன்றமானது 2021 ஆம் ஆண்டிற்கான உலகளாவியப் பாலின இடைவெளி அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்தத் தரவரிசையில் இந்தியாவின் நிலை 28 இடங்கள் கீழ் சென்றுள்ளது.
- இக்குறியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 156 நாடுகளில் இந்தியா 140வது இடத்தில் உள்ளது.
- இத்துடன் இந்தியாவானது தெற்காசியாவின் மூன்றாவது மோசமான நிலையிலுள்ள நாடு எனும் நிலையை அடைந்துள்ளது.
- மேலும் பொருளாதாரப் பங்கேற்பு மற்றும் வாய்ப்பு ஆகிய துணைக் குறியீட்டிலும் சரிவைக் கண்டுள்ளது.
- இந்தப் பரிமாணங்களில் இந்தியாவின் பாலின இடைவெளி இந்த ஆண்டில் 3% விரிவடைந்துள்ளதாக இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
- இது இந்நாள் வரையில் 32.6% என்ற அளவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- 2019 ஆம் ஆண்டில் 23.1% ஆக இருந்த பெண் அமைச்சர்களின் எண்ணிக்கை 2021 ஆம் ஆண்டில் 9.1% ஆக குறைந்துள்ளது.
- பெண் தொழிலாளர் பங்கேற்பு வீதம் 24.8% என்ற அளவிலிருந்து 22.3% என்ற அளவிற்குக் குறைந்ததும் இந்தியாவைப் பின்னடைவிற்கு இட்டுச் சென்ற காரணிகளில் ஒன்று ஆகும்.
- தொழில்முறை மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் பெண்களின் பங்கு 29.2% என்ற அளவாக குறைந்துள்ளது.
- உயர்மட்டப் பணி நிலை மற்றும் மேலாண்மை நிலைகளிலும் பெண்களின் பங்கு குறைவாக உள்ளது.
- இவற்றுள் 14.6% என்ற அளவிற்கு மட்டுமே பெண்கள் பொறுப்பு வகிக்கின்றனர்.
- மேலும் 8.9% நிறுவனங்கள் மட்டுமே உயர்மட்ட அளவில் பெண் மேலாண்மை அதிகாரிகளைக் கொண்டு இயங்குகின்றன.
- இந்தியாவில் பெண்கள் ஈட்டும் வருவாய் ஆண்களின் வருவாயில் 1/5 பங்கு மட்டுமே உள்ளது.
- இதுவே உலகளாவிய பாலினக் குறியீட்டில் இந்தியா கடைசி 10 இடங்களில் இருப்பதற்குக் காரணமாகும்.

*குறிப்பு*

- இந்தியாவின் அண்டை நாடுகளில் நேபாளம் 106வது இடத்திலும், ஆப்கானிஸ்தான் 156வது இடத்திலும், பாகிஸ்தான் 153வது இடத்திலும், இலங்கை 116வது இடத்திலும் மற்றும் பூடான் 130வது இடத்திலும் உள்ளன.
- இந்தப் பகுதிகளில் ஒட்டு மொத்த பாலின இடைவெளியானது 62.3% என்ற அளவிற்கு உள்ளது.
- தெற்காசியப் பகுதியில் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய இரு நாடுகள் மட்டுமே இந்தியாவைக் விட குறைவான தரவரிசையில் இடம் பெற்றுள்ளன.
- 12வது முறையாக ஐஸ்லாந்து ஆனது இந்தக் குறியீட்டில் முதலிடத்தில் உள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் 153 நாடுகளுள் இந்தியா 112வது இடத்தில் இருந்தது.

South Asia

| Country | Rank | | Score |
|---|---|---|---|
| | Regional | Global | |
| Bangladesh | 1 | 65 | 0.719 |
| Nepal | 2 | 106 | 0.683 |
| Sri Lanka | 3 | 116 | 0.670 |
| Maldives | 4 | 128 | 0.642 |
| Bhutan | 5 | 130 | 0.639 |
| India | 6 | 140 | 0.625 |
| Pakistan | 7 | 153 | 0.556 |
| Afghanistan* | 8 | 156 | 0.444 |

☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆